மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *284*, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை.

வினா எண் *285*, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண் *286*, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் *287*, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

287–

பேரூர் தொகுதியில் சில பகுதிகளில் முழுநேரமும் மின்சாரம் வழங்குதல்

****20160*--திரு. கே. பி. ராஜு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி செட்டிப்பாளையம், மலுமிச்சம்பட்டி ஆகிய இடங்களில் முழுநேரமும் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி செட்டிபாளையம், மலுமிச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் மதுக்கரை துணை மின்நிலையத்திலிருந்து வெளிவரும் கிணத்துக்கடவு *22* கே. வி. ஊரக மின்னூட்டி மூலம் மின் வினியோகம் நடைபெறுவதால் இங்கு முழுநேரமும் மும்முனை மின்சாரம் வழங்க இயலாது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதி செட்டிபாளையம், மலுமிச்சம்பட்டி, ஒத்தக்கால் மண்டபம் போன்ற பகுதிகள் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள். அங்கே இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட் கூட இருக்கிறது. நேற்றைக்குக் கூட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து ஒரு பத்திரிக்கை அலுவலகத்தைத் திறந்து வைத்து விட்டு வந்தார்கள். இதுவெல்லாம் அதை உள்ளடக்கிய பகுதிகள் தான். ஆகவே, அந்தப் பகுதியில் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால்--மின்சாரம் *6* மணி நேரம் தான் வருகிறது. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதைப்

போல அங்கே மின்சாரம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால்-கோவை மாவட்டம் தொழில் நகரமாக முன்னேறிக் கொண்டு வருகிற காரணத்தால் அந்தப் பகுதிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கு வழங்குகின்ற அளவுக்கு மின்சாரத்தை இந்த அரசு வழங்கவேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொண்டு அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மும்முனை மின்சாரம் வழங்குவதிலே சில விதிமுறைகளை நம்முடைய வாரியம் பின்பற்றி வருகிறது. அதிலே தாழ் மின் அழுத்தம் தொழில் துறையின் மின் அணுக்கள் மின் ஊட்டியுடன் இணைக்கப்பட்டுள்ள தொழில் துறை, விவசாயம், குடிநீர் துறை ஆகியவற்றின் மொத்தக் குதிரைத் திறனில் 50 சதவிதம் இருக்கவேண்டும். அதேபோல் தொழிற்சாலைகள் என்றால் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அதையெல்லாம் நீட்டிக்கொண்டே போனால் அவற்றிற்கு நேரம் ஆகும். அந்த நிபந்தனைகளின் அடிப்படையில்தான் உயர் மின் அழுத்தம் அந்தப் பகுதிக்கு வழங்கமுடியும். ஆகவே, அந்தப் பகுதி அதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டு வருமா என்று ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து அப்படி அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்தப் பகுதி வருமானால் அந்தப் பகுதியில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு ஆய்வுகளை எடுக்கலாம். அந்த அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு முழுவதும் மின்சார வெட்டு இல்லாமல் இப்போது மின்சார சப்ளை நடைபெற்று வருகிறது. இன்னும் ஒரு ஆண்டுக்குள் மின்சாரத் தயாரிப்பில் உபரி மாநிலமாகக் கூட புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு விளங்குகின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அங்கு தொழிற்சாலைகள் மிகவும் அதிகமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு வருகிறது. நீங்கள் கோவையை எடுத்துக்கொள்வீர்களானால் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வரைக்கும் இரு புறங்களிலும் தொழிற்சாலைகள், விவசாயிகளாக இருக்கின்றவர்கள் அத்தனை பேரும் தொழிற்சாலையை ஆரம்பித்து தொழிற்சாலைகள் நிறைந்து கொண்டு வருகின்ற பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் இந்த ஆண்டே-ஒத்தக்கால் மண்டபம், செட்டிபாளையம், மலுமிச்சம்பட்டி போன்ற பகுதிகளில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்

[*1994 ஏப்ரல் 18*

இந்த ஆண்டே–24 மணி நேரமும் மின்சாரம் சப்ளை செய்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி முயற்சிக்குமா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிபந்தனையின் கீழே மின்சாரம் அளிப்பதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால்கூட, சில பிரச்சினைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்கிறோம். அதாவது குடிநீர்ப் பிரச்சினை, அதைப்போல மருத்துவமனைகளுக்கு மின் இணைப்பு வழங்குதல் ஆகியவைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்கிறோம், இந்த நிபந்தனை இல்லாவிட்டால்கூட விதிவிலக்கு கொடுத்து, கொடுக்கிறோம். ஆனால், தனிப்பட்ட முறையிலே தொழிற்சாலைகள் என்று வருகின்றபொழுது நாம் சில விதிமுறைகளை நம்முடைய மின்சார வாரியத்தின் கீழே வைத்திருக்கின்றபொழுது, அதனுடைய தொடர்ச்சியாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அங்கே இருக்கிற தேவைகளைக் கருதி-குறிப்பாக, கோவை மாவட்டத்திலே தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன என்பதை இந்த அரசு அறியும். தேவைகளைக் கருதித்தான்–பல இடங்களிலே டிரான்ஸ்பார்மர்கள் போடுவது, புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான பணிகளை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்ற அந்தப் பகுதியிலே, நான் ஏற்கெனவே சொன்னபடி, எந்தெந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் தேவை என்பதையெல்லாம் ஆய்வு செய்ததற்குப் பின்னாலேதான் அறிவிக்க முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அந்தப் பகுதிகளை உடனடியாக மின் வாரியத்தினுடைய அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள். ஒரு அறிக்கையை விரைவிலே பெற்று, அதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 288, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ். ஜெயக்குமார். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.